# تعليم اللغة العربية المنطوقة للعمالة المهاجرة السريلانكية في دول الشرق الأوسط – بالإشارة الخاصة إلى العمالة بمدينة كاتانكودى"

**Teaching Spoken Arabic Language for Migrant Workers in the Middle East Countries**


**Supervisor**
*Mr. MHA. Munas,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. MIF. Silmiya,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*


## ملخص البحث


الحمد لله بنعمته تتم الصالحات والصلاة والسلام على سيدنا محمد صلى الله عليه وسلم وآله وصحبه أجمعين أما بعد:

فهذا البحث بعنوان "***تعليم اللغة العربية المنطوقة للعمالة المهاجرة السريلانكية في دول الشرق الأوسط–بالإشارة الخاصة إلى العمالة بمدينة كاتانكودى***" هذا دراسة ميدانية تركز على عينات بمدينة كاتانكودى. فإن هجرة العمالة لعبت مازالت تلعب دورا هاما في تقدم اقتصادية سريلانكا، كما أن نسبة 80.3% من العمالة السريلانكية تخدم في الشرق الأوسط، وإن منطقة باتكلو تحتل المكانة الأولى في استضافة الشرق الأوسط للعمالة السريلانكية الشرقية.

ومع العلم بأن هذا التزايد الكبير الذى نلاحظه في الإيرادات الخارجية المكتسبة بهؤلاء يسهم اسهاما بارزا في بناء اقتصادية سريلانكا. إلا أن هذه الطبقة تواجه عدة من المشاكل في المجالات المهنية في الشرق الأوسط، ومن أهم هذه المشاكل هى اللغة والتواصل كما تذكره تقارير مكتب الاستقدام الخارجى بسريلانكا، لأن معظم هؤلاء العمالة السريلانكية ليس لديهم الكفاءة اللغوية للاتصال مع مجتمع ناطق اللغة العربية.

ومما تجدر الإشارة إليه هنا، أن التدريب المهنى الذى يقدمه مكتب الاستقدام الخارجى بسريلانكا لهؤلاء العمال لم يكن فـي حالة منشودة بالنسبة إلى تقوية لغة التواصل العربية المنطوقة. لديهم فاستدعت الحاجة إلى تقديم برنامج لغوي مثل لغة كوريا ليركز على تقوية اللغة العربية لدى هؤلاء العمالة، لوضع حد لأهم المشاكل التى يعانى منها العمالة السريلانكية . مع العلم بأن هذا الجهد لا شك أنه يساهم لتطوير الوطن خاصة لبناء اقتصادية سريلانكا.

يستهدف هذا البحث تحقيق النقاط التالية:

- ✓ تقييم دور العمالة المهاجرة السريلانكية في بناء اقتصادية سريلانكا.
- ✓ تشخيص المشاكل التى يواجهها العمالة المهاجرة وبخاصة تشخيص تحديات التواصل.
- ✓ تقديم منهج دراسي لتعليمهم اللغة العربية المنطوقة للتواصل بها.

لقد استخدمت الباحثة في هذا البحث المنهج الوصفى التحليلى لاستنتاج المعلومات الأولية والثانية التى حصلت عليها الباحثة من بالمقابلات الشخصية، والإستبانة وعن طريق العمل المكتبي. كما تعتقد الباحثة أن هذا البحث يكون بمثابة رائد للسالكين في هذا المجال وسوف يكون عونا لهم في المستقبل إن شاء الله، كما أنه يكون سجلا لرصد النتائج التي توصل إليها الباحثة.

**الكلمات الدالة**: اللغة العربية المنطوقة، برنامج، العمالة المهاجرة، سريلانكا، الشرق الأوسط

# الصعوبات التي يواجهها مترجموا سريلانكا من اللغة العربية إلى اللغة التاميلية"

**The problems faced by Sri Lankan Translators from Arabic Language into Tamil Language**


**Supervisor**
*Mr. AM. Razick,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms.ACF. Fainas,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*


## ملخص البحث


الحمد لله والصلاة والسلام على رسول الله وبعد:

لقد أصبحت الترجمة علما خاصا، ولها دور بارز في نشر الثقافات والعلوم بين الناس، وكما أن لها دورا هاما في تقدم البشرية وازدهارها. ولأن الترجمة تشكل عاملا أساسيا في التواصل بين الشعوب، ونقل المعارف والعلوم بين الأمم، وتطوير التجارب الإنسانية على مستوى العالم، ولولا الترجمة لما وصلت علوم الأولين للأجيال المتعاقبة في اللغات المختلفة.

إن سريلانكا دولة يعيش فيها المسلمون بأقلية.وأن لغتهم المحلية هي اللغة التاميلية التي تختلف إختلافا بسيطا عما يستخدمها الهندوس في سريلانكا.ولكن أن لغتهم الدينية هي اللغة العربية ترددها ألسنتهم في عباداتهم وفي معاملاتهم اليومية.فلا يمكن لأحد يريد أن يفهم الإسلام وتعاليمه حق الفهم إلا بالتدرب على اللغة العربية بحيث أن معظم الكتب الشرعية الإسلامية وأمهاتها تكون باللغة العربية، والمسلمون بسريلانكا يحتاجون إلى المعرفة الدقيقة عن الترجمة لأجل ترجمتهم الكتب الشرعية الإسلامية إلى لغتهم التاميلية.

وبما أن هاتين اللغتين من الأسر اللغوية المختلفة نجد فيها أيضا اختلافات ملموسة في نظام القواعد البنيوية والتركيبية .ومن خلال تمييز هذه الإختلافات والصعوبات يمكن للمترجمين إنتاج عملية ترجمة جادة للأمة الإسلامية بسريلانكا.مع العلم بأن إبتداء الترجمة، والألفاظ

الدخيلة، والترادف، ومعاني الحروف، والصوت، وسياق الكلمة، وذوق الألفاظ، والعهد، والتعلقات، والاستعارة، والمجاز إلى غير ذالك من المحسنات اللفظية والمعنوية.

يهدف هذا البحث إلى التركيز على دراسة صعوبات الترجمة في عملية الترجمة من اللغة العربية إلى اللغة التاميلية. كما يهدف إلى تقديم حلول لصعوباتها . ويركز على ترقية مهارات المترجمين في سريلانكا.

وتقوم الباحثة بإستخدام المنهجين الوصفي والتقابلي في تحليل المعلومات الأولية من الإستبانة والمقابلة الشخصية والملاحظة، ومن المعلومات الثانوية من مواقع الشبكة العنكبوتية والتقارير والعمل المكتبي وغيرها.

يسفر هذا البحث عن نتائج من تحديد الصعوبات التي يواجهها المترجم فيما بين اللغتين العربية والتاملية، وتقديم حلول لتلك الصعوبات خلال إستخدام طرق وأساليب جديدة ومنها:

- ✓ إنشاء منظمة خاصة للمترجمين.
- ✓ استخدام المترجم الموسوعات والمعاجم الحديثة.
- ✓ إقامة الدورات لتدريب المترجمين.
- ✓ قيام المطابع بدورها لإصدار التراجم.
- ✓ إنشاء لجنة خاصة لمراقبة عملية الترجمة.
- ✓ معرفة المترجم قواعد اللغة،وثقافاتها بمعرفة دقيقة.

الكلمات الدالة: الأسرة اللغوية ،الترجمة ، المترجم ، الصعوبات ،التقنية.

# مفهوم الحلال والحرام واستخدامهما عند غير المسلمين فى سريلانكا"

**Meaning of Halal, Haram and its usage among the non- Muslims in Srilanka**

**Supervisor**
*Mr. ABM. Aliyar,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. M. Samsath Baham,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

ملخص البحث

الحمد لله والصلاة والسلام على رسول الله وعلى آله و أصحابه أجمعين. أما بعد: فإن الإسلام هو منهج متكامل وهو الدين الكامل المقبول حيث يشمل الحل على جميع المشكلات التي يتواجهها الإنسان في حياته، وينظم حياته، وأن الله تعالي قد حدد حدودا فأمر الإنسان أن لايتعد تلك الحدود، ومن حدوده تعالى الحلال والحرام، وأمر الله تعالي أن يتبع الحلال ويجتنب الحرام في جميع حياته ولو كان يعيش في أي بقعة من بقاع الدنيا.

إن جمهورية سريلانكا دولة تعيش فيها أجناس مختلفة من البوذيين والهندوسيين والمسلمين والنصارى، ولكن المسلمين فيها هم أقلية ثانية، وهم يتمسكون بالشريعة الإسلامية من متدقيق لمفهوم الحلال والحرام. ولكن لم يدرك غير المسلمين مفهومهما الحقيقي بدقة . وهذا الذي أدى إلى حدوث مشكلة الحلال والحرام عند غير المسلمين في سريلانكا رغم إصدار قرارحكومي يقضي تنفيذ قانون الحلال عام 2000م وبناء على هذا القرار وزعت الشهادات منذسنة 2005م

وهناك أسباب أدت إلى تعقيد مشكلة الحلال والحرام في سريلانكا عند غير المسلمين ، فلا يشك أحد في أن توزيع شهادات الحلال والحرام على المسلمين لم يحدث أية تأثيرات على الديانة البوذية وثقافاتها وعلى شعوب آخرين، وفيها فوائد كثيرة للجميع، ولذا قد استدرك

الجميع السبب الرئيسي لحدوث هذه المشكلة وهي عدم إدراك الحقيقة والصواب لمصطلح الحلال والحرام .

وبناء على هذه المشكلة يهدف هذا البحث إلى التركيز على تحديد المشاكل و الشبهات في موضوع الحلال والحرام عند غير المسلمين كما يهدف إلى تقديم حلول لإزالة المفاهيم الخاطئة عندهم .

كما تستخدم الباحثة في هذا البحث المنهج الوصفي التحليلي في جمع المعلومات الأولية من المقابلة والملاحظة والاستبانة ومن المعلومات الثانوية من العمل المكتبي والمجلات والمواقع الإلكترونية.

ومن النتائج التي توصلت إليها الباحثة وهي وجود الأسباب الذاتية السياسية عند بعض البوذيين لقمع تطبيق الحلال والحرام ومنع توزيع الشهادة لهما، وهناك يوجد شبهات في عدم الوضوح في فهم مصطلحي الحلال والحرام .

الكلمات الدالة: الحلال ، والحرام ، المجتمع السريلانكي.

# تدريس اللغة العربية في المدارس القرآنية بكاتانكودي–الواقع والمأمول

**Teaching Arabic Language in Quran Madrasas at Kattankudy – Opportunities and Strategies**

**Supervisor**
*Mr. MSM. Jalaldeen,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. AK. Saajiha,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

## ملخص البحث

موضوع البحث:تدريس اللغة العربية في المدارس القرآنية بكاتانكودي–الواقع والمأمول–

الحمد لله والصلاة والسلام على رسول الله وعلى آله وأصحباه أجمعين ، أما بعد:فأينما يكون المسلمون في العالم كانت رغبتهم إرسال أطفالهم إلى المدارس القرآنية لقراءة القرآن منذ صغرهم، حيث إنها تعد من أولى المدارس للأطفال وذلك لما يحث الإسلام على وجوب تعلمه على كل مسلم ومسلمة واتباعه في حياتهم. وكما أن المدارس القرآنية تعد مراكز إسلامية لتدريس القرآن والآداب الإسلامية.

ولا يزال عدد من المدارس القرآنية يقوم بهذه المهمة في مدن مختلفة في أنحاء سريلانكا ، ومن تلك المدن مدينة كاتانكودي بمنطقة بارتيكالو من شرق سريلانكا والتي يعيش فيها المسلمون بأغلبية. و فيها عدد من المدارس يقوم بتدريس اللغة العربية للطلبة الدارسين وبعضها تعمل بهذه المهمة تحت إشراف جمعية تنمية المدارس القرأنية وبعضها تعمل مستقلة عنها.وأكثر المدارس القرآنية فيها تستخدم طرقا تقليدية في تدريس اللغة العربية . رغم وجود المدارس الحديثة في تدريس القرآن واللغة العربية في أنحاء سريلانكا ، ولكن نرى أن الطرق التقليدية في تدريس القرآن غير مؤثرة عند الطلاب. وسببها الرئيسي هو تركيز العناية على تدريس اللغة العربية في المدارس القرآنية بمهارة القراءة فقط وعدم الاهتمام في المهارات الأخرى من مهارات التحدث والكتابة والاستماع .

يهدف هذ البحث إلى التركيز على النقاط التالية :

تعريف عن دخول الإسلام في كاتانكودي ونشأة المدارس القرآنية فيها.

دراسة المدارس القرآنية في كاتانكودي إداريا ومنهجيا وأسلوبيا .

عرض الإستراتيجيات الحديثة في تدريس اللغة العربية في المدارس القرآنية فيها.

كما تستخدم الباحثة في هذا البحث المنهج الوصفي التحليلي في جمع المعلومات الأولية من المقابلة والملاحظة والاستبانة ومن المعلومات الثانوية من العمل المكتبي والمجلات والمواقع الإلكترونية.

وقد أسفر البحث عن نتائج من خلال سفر الباحثة إلى المدارس القرآنية بمدينة كاتانكودي،

اتباع الطرق التقليدية في تدريس اللغة العربية في المدارس القرآنية بمدينة كاتانكدي

قلة المعرفة عن الإستراتيجيات الحديثة في تدريس اللغة العربية عند المعلمين.

عدم تدريب المعلمين في كيفية التدريس بالطرق الحديثة

أهمية إدخال المهارات الأربع في تدريس اللغة العربية

الكلمات الدالة: طرق التدريس، كاتانكودي، المدارس القرآنية، الإستراتيجيات، أربع مهارات لغوية

## “கூட்டு ஸகாத் வேலைதிட்டத்தின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதார நிலை”
## (10 வருடகாலப் பகுதியினுள் காத்தான்குடி நகரை மையப்படுத்தியதான ஆய்வு)


**Supervisor**
*Mr. HM. Ahamed Hilmy,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Mrs. MAF. Nusra,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


மாறி வரும் பொருளாதார சூழ்நிலையில் மனித வாழ்வை அலைக்கழிப்பதில் வறுமைப் பிரச்சினையானது மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த ஏழ்மையும் வறுமையும் இன்று நம் தேசத்துப் பிரச்சினை மட்டுமன்று. அது ஒரு சர்வதேசப் பிரச்சினையாகும். இதனால் இத்தகைய வறுமைப் பிரச்சினையை ஒழிப்பதற்காக இன்று அபிவிருத்தி அடைந்து வரும் எல்லா நாடுகளும் வறுமை ஒழிப்பை முக்கிய இலக்காக கொண்டு அதற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனினும் மனித அறிவே அத்திட்டங்களை வரைவதனால், பெரும்பாலும் அவர்களின் முயற்சிகள் தோல்வியிலே முடிகின்றன. ஆனால் இஸ்லாம் முன்வைக்கும் வறுமை ஒழிப்புத்திட்டமான ஸகாத் வல்ல அல்லாஹ்வினால் வரையப்பட்டுள்ளதால் குறைபாடுகளற்று பூரணத்துவம் வாய்ந்ததாக திகழ்கின்றது. எனவே இந்த ஸகாத் எனும் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வறிய மக்களின் வாழ்வதாரத்தை முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

‘கூட்டு ஸகாத் வேலை திட்டத்தின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதார நிலை’ என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது, காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கூட்டு ஸகாத் நிதியத்தை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டு ஸகாத் நிதியம் தனது கடந்த பத்தாண்டுகளில் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் என்ன?, அவை அம்மக்களை சென்றடையவில்லையா?, அங்கு எதிர்நோக்கப்படுகின்ற சவால்கள் என்ன? என்பதை கண்டறிவதே இங்குள்ள ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகின்றது. இப் பிரதேச சம்மேளன கூட்டு ஸகாத் நிதியத்தின் நடைமுறைச் செயற்பாடுகளை கண்டறிந்து, கடந்த 10 வருட காலப்பகுதியில் கூட்டு ஸகாத் நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார, சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் முதலாம், இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து முறையைப் பயன்படுத்தி பெறப்பட்டன. ஆய்வுப்பிரதேசமானது 6 வலயங்களாக பிரிக்கப்பட்டு நேரடியாக சென்று, நோக்கி மாதிரி நுட்ப முறையின் அடிப்படையில் சுமார் 60 வினாக்கொத்துகளும், ஒவ்வொரு வலய அடிப்படையில் ஒரு வலயத்திற்கு 10 வீதம் என்று 6 வலயங்களுக்கும் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டதுடன் நேர்கானல், அவதானம் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிண்ணனியிலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள், காத்தான்குடி பிரதேச ஸகாத் நிதியத்தினால் வெளியிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள், வருடாந்த கணக்கறிக்கைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தில் மூலம் பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதன் மூலம் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் பெண்களின் மத்தியில் ஸகாதின் பங்களிப்பு-கிண்ணியா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு


**Supervisor**
*Mr. MHA. Nairoos,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Mrs. S. Raisana,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*



### ஆய்வுச் சுருக்கம்

இன்று உலகளாவிய ரீதியில் கணவனால் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவைகள், அநாதைப் பெண்கள் போன்றவர்கள் வறுமை என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு நலிந்த ஒரு சமூகமாக மாறியுள்ளனர். இப்பெண்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றங்களை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை முற்று முழுதான ஒரு செயற்பாடாக அமையவில்லை. ஆனால் ஸகாத் எனும் திட்டத்தின் மூலம் இப்பெண்களின் வாழ்வில் பல முன்னேற்றங்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முஸ்லிம் பெண்களின் மத்தியில் ஸகாதின் பங்களிப்பு-கிண்ணியா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது, கிண்ணியா பிரதேச பெண்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதில் ஸகாதின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை ஆராய்வதே ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகிறது. இப்பிரதேச ஸகாத் செயற்பாடுகளின் நடைமுறையைக் கண்டறிந்து, கல்வி, பொருளாதார மற்றும் சமூக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஸகாதின் பங்கினை மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்டே இவ்ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது ஒரு சமூகவியல் ஆராய்ச்சி என்பதால் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளைப்பயன்படுத்தி அவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்படவுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, முறையைப் பயன்படுத்திப் பெறப்படவுள்ளன. எளிய எழுமாற்று மாதிரி எடுப்பின் மூலம் 100 பேரை தெரிவு செய்து அவர்களுக்கு வினாகொத்து வழங்கப்பட்டு அவற்றில் 90 வினாக்கொத்துக்கள் மீளப்பெறப்பட்டு அதனடிப்படையிலும், நேர்காணல், அவதானம், போன்றவற்றில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பின்னணியிலும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் கிண்ணியா பிரதேச பைத்துல் ஸகாதின் பதிவேடுகள், புள்ளிவிபரங்கள், என்பவற்றினூடாகவும் இணையத்தளம் மற்றும் நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றினூடாகவும் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் உள்ளடங்கப்பட்டுள்ள தலைப்புக்கள் ஆய்வின் கருதுகோளுடன் தொடர்புபட்டதாக விளங்குகின்றன.

இவ்வாய்வின் மூலம் கிண்ணியா பைத்துல் ஸகாத் அமைப்பானது பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வீடமைப்பு, கல்வி சகாய நிதி, சுயதொழில் ஊக்குவிப்பு என்பவற்றினூடாக அவர்களின் சகல செயற்பாடுகளிலும் வெற்றியை தந்துள்ளது. அத்துடன் ஸகாத் பற்றிய போதிய தெளிவின்மை, வழங்குவோர் நிஸாப் பற்றிய தெளிவின்மையால் சிறு தொகையை வழங்குகின்றமை, குடும்பத்தினர், பணியாளர்கள்

போன்றோருக்கு மாத்திரம் கொடுத்து சுருக்கிக் கொண்டமை, ஸகாத் ஒரு கூட்டுக்கடமை என்ற போதியளவிலான அறிவின்மை, ஸகாத் நிறுவனத்தைப் பற்றிய விமர்சனங்கள், நிர்வாகிகளின் அசமந்த போக்கு என்பவற்றால் அது சில சவால்களையும் எதிர்நோக்குகிறது என்பதை இணங்காணக்கூடியதாக இருந்தது.

எனவே கருதுகோளினை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வாய்வானது சிறப்புற அமைய எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்விலிருந்து கிண்ணியா பைத்துல் ஸகாத் நிதியமானது பாதிக்கப்பட்ட பெண்களின பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் ஓரளவு பங்காற்றியுள்ளது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

## விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான கரிசணை கல்ஹின்னை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**Supervisor**
*Mr. MSM. Jalaldeen,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. MTS. Safriya,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது 'விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான கரிசணை கல்ஹின்னை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு' எனும் தலைப்பில் ஆய்வாக அமையப்பெறவுள்ளது. மத்திய மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள கண்டி மாவட்டத்தில், பூஜாப்பிட்டிய செயலகப் பிரிவிலுள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசமாக கல்ஹின்னை காணப்படுகின்றது.

இங்கு சுமார் 1000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில குடும்பங்களில் விசேட தேவையுடையோர் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே விசேட தேவையுடையோர், அவர்கள் பற்றிய இஸ்லாமிய நோக்கு, அவர்கள் மீதான கரிசணை தொடர்பிலும் இவ் ஆய்வு அமையப்பெறவுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் இத்தலைப்பில் எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்ஹின்னையில் விசேட தேவையுடைய முஸ்லிம்களை அடையாளப்படுத்துவதோடு அவர்கள் கவனிக்கப்படுகிறார்களா என்பதைக் கண்டறிதல், இப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான சமூகத்தின் பார்வையைத் தூண்டல், இப் பிரதேசத்தில் விசேட தேவையுடையோர் பற்றிய இஸ்லாமிய நோக்கை ஒன்றுதிரட்டல், அத்தோடு அவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற முயற்சித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெறவுள்ளது.

இவ்வாய்வானது அளவு ரீதியானதாகவும் பண்பு சார் முறையிலும் அமையவுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்படவுள்ளன. முதலாம் நிலைத் தரவகளாக: இக் கிராமத்தின் பிரதேச செயலாளர் பிரிவு, கிராம சேவகர் பிரிவு, பாடசாலை, பள்ளிவாசல், மத்ரஸா மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களும் இன்னும் வினாக்கொத்து, நேர்காணல்கள், அவதானிப்புகள் என்பனவும் பயன்படுத்தப்படவுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக: இவ்வாய்வுடன் தொடர்புடையதாக எழுதப்பட்ட நூற்கள், அறிக்கைகள், இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்படவுள்ளன.

இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் முதலாவது அத்தியாயம்: ஆய்வு முன் மொழிவாக அமையவுள்ளது. இரண்டாவது அத்தியாயம்: விசேட தேவையுடையோர் பற்றிய விளக்கங்களுடன், இவர்கள் தொடர்பான இஸ்லாமிய மற்றும் மருத்துவ நோக்கு தொடர்பாகவும் அமையவுள்ளது. மூன்றாவது அத்தியாயம் ஆய்வுப் பிரதேசம் தொடர்பாகவும், ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவையுடையோர் தொடர்பாகவும் அமையப்பெறவுள்ளது. நான்காவது அத்தியாயம் விசேட தேவையுடைய முஸ்லிம்கள்

மீதான கரிசணை தொடர்பாக அமையவுள்ளது. ஐந்தாவது அத்தியாயம்: ஆய்வு தொடர்பான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டு முடிவுரையை உள்ளடக்கி நிறைவு செய்யப்படவுள்ளது.

**கலைச் சொற்கள்:** விசேட தேவையுடையோர், விசேட கல்வி, மாற்றுத் திறனாளிகள், கரிசணை, கல்ஹின்னை

# கல்முனை முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு


**Supervisor**
*Dr. MIM. Jazeel,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Mrs. MI. Majitha Banu,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இன்று, இஸ்லாமிய வங்கி முறையானது உலகளாவிய ரீதியில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு தொழில் துறையாக காணப்படுகின்றது. இஸ்லாமிய வங்கித்துறையில் பாரிய வளர்ச்சி கண்டு வரும் நாடுகளாக Malaysia, Bahrain, Jordan, Kuwait, Qatar, Saudi Arabia, Turkey, the United Arab Emirates போன்ற நாடுகள் பதிவாகியுள்ளன. பல்லின மக்கள் ஒன்றித்து வாழும் இலங்கை நாட்டிலும் கூட முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட வங்கியொன்று அண்மைக்காலமாக இயங்கி வருகின்றது. அத்தோடு இங்கு காணப்படும் பாரம்பரிய வங்கிகளும் கூட இஸ்லாமிய வங்கி முறையை தனது ஒரு கிளையாக ஆரம்பித்து நடாத்தி வருகின்றன. இஸ்லாமிய வங்கித்துறையின் வெற்றியானது அது பற்றி மக்கள் மத்தியிலுள்ள விழிப்புணர்வில் தங்கியுள்ளது. குறிப்பாக கல்வியறிவு படைத்தவர்கள் மத்தியில் அது பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். ஏனெனில், இதன்மூலம் ஏனையவர்களும் விழிப்புணர்வூட்டப்பட அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவேதான் இவ்வாய்வானது, இலங்கை நாட்டில் கல்வியறிவு படைத்த முஸ்லிம்களை அதிகமாகக் கொண்டுள்ள பிரதேசமான கல்முனைப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை பரீட்சிப்பதாகவுள்ளது.

இவ்வாய்வின் பிரதான நோக்கம், கல்முனை முஸ்லிம் ஆசிரியைகள் மத்தியில் இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினை பரீட்சிப்பதாகும். அத்தோடு இவ்வாய்வானது, விழிப்புணர்வு மட்டத்திற்கான காரணத்தைக் கண்டறிதல், மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வழிமுறைகளில் வினைத்திறன் மிக்க வழிமுறையினைக் கண்டறிதல் ஆகிய உப நோக்கங்களையும் கொண்டதாக அமையும். இந்நோக்கங்கள் பின்வரும் ஆய்வு வினாக்களை உருவாக்கும். அவை (1) இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு காணப்படுகின்றது? (2) விழிப்புணர்வு கூடுதலாக அல்லது குறைவாக காணப்படுவதற்கான காரணம் என்ன? (3) விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வழிமுறைகளில் வினைத்திறன் மிக்க வழிமுறைகள் எவை? என்பனவாகும். இவ்வாய்வானது பண்புரீதியான தரவுகளைக் கொண்டதாக அமையும் அதேவேளை, ஆய்வினை மேலும் வலுப்படுத்துவதற்காக தொகைரீதியான தரவுகளையும் பயன்படுத்தும். இவ்வாய்வில் முதன்மைத் தரவுகளும், இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்படும். முதன்மைத்தரவுகள், கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட 200 ஆசிரியைகளுக்கு வினாக்கொத்தினை வழங்குவதன் மூலம் திரட்டப்படும். இதன் தொகைரீதியான தரவுகள் SPSS மென் பொருளினை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படும். மேலும் இவ்வாய்வின் கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக வடிவமைப்பதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்படும்.

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டதாக அமையும். ஆய்வின் அறிமுகத்தினை உள்ளடக்கியதாக முதல் அத்தியாயமும், ஆய்வு தொடர்பான கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கியதாக இரண்டாம் அத்தியாயமும் அமையும். இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்படவுள்ள ஆய்வுமுறைமையானது அத்தியாயம் மூன்றில் குறிப்பிடப்படும். அத்தியாயம் நான்கில் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும். அத்தியாயம் ஐந்தானது ஆய்வு தொடர்பான முடிவுகளையும் கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாக அமையும்.

**மூலச் சொற்கள்**: இலங்கையில் இஸ்லாமிய வங்கி முறை, இஸ்லாமிய வங்கி பற்றிய விழிப்புணர்வு, ஆசிரியைகள், விழிப்புணர்விற்கான வழிமுறைகள்.

# இலங்கையில் காணப்படுகின்ற இஸ்லாமிய நிதிநிறுவனங்களினது ஷரீஆ வழிநடாத்தலின் செயற்பாடுகள் - அமானா வங்கியை மையப்படுத்திய ஆய்வு

**Supervisor**
*Mr. MHM. Nairoos,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. CB. Siyana,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

பொருளாதாரம் என்பது மனிதனின் வாழ்வியலுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. தனிப்பட்ட ரீதியான அங்கிகாரம் முதல் உலகளவிய வரை அவசியமான தொன்றாக காணப்படுகிறது. ஒரு சமூதாயத்தின் வாழ்வியல் சிறப்பாக அமைந்துள்ளதா? என்பதனை ஆராயும் ஒரு சுட்டியாகவும் இப் பொருளாதாரம் காணப்படுகிறது. இத்தகைய பொருளாதாரத் துறையின் வளர்ச்சிக்கு உதவும் செயன்முறைகளினை மேற்கொள்வதற்கு உதவும் கருவிகளாக நிதிநிறுவகங்களின் பங்களிப்பே அதிகமாகும். எனவே தான் இன்று உலகளாவியரீதியாக மட்டுமின்றி இலங்கையிலும் பாரம்பரிய வங்கிகளின் தோற்றமும் சேவையும் அதிகரித்துள்ளது. எனினும், முஸ்லிமகள் மக்கள் தங்களின் பொருளாதாரத் தேவைகளினை பூர்த்தி செய்யும் ஷரீஆத்தின் வழிமுறையினை பின்பற்றும் நிதிநிறுவனங்களையே விரும்புகின்றனர். எனவேதான் உலகளாவியரீதியாக பல இஸ்லாமிய நிதிநிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த வகையில் இலங்கையில் கூட இஸ்லாமிய வங்கியினதும் ஏனைய நிதிநிறுவனங்களது தோற்றமும் அதிகரித்துள்ளது.

எனினும் குறிப்பாக இஸ்லாமிய வங்கியான அமானா வங்கியானது இன்று மக்களினது அதிகளவிலான தேவையினை பூர்த்தி செய்யுமலவிற்கு பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. அதனது ஒவ்வொறு சேவைத்திட்டமும் பூரணமான ஷரீஆ வழிகாட்டலுலின் முழுமைப்படுத்தும் திட்டமாகவே காணப்படுகின்றது.

எனினும் இவ்வாறான ஷரீஆத் திட்மிடலுடன் கூடிய அமானா வங்கியினது அனைத்து செயற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதும் அதன் முழுமையான சேவையினை மக்களுக்கு வழங்கும் முறைமையினை அறிதலுமே இவ் ஆய்வின் நோக்கமாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் மக்களினது தேவையை பூர்த்தி செய்வதில் முழுமையான ஷரீஆத் திட்டத்தை தனது அனைத்து நிதியியல் நடவடிக்கையிலும் நடைமுறைக்கு கொண்டு வறுவதினை ஆராய்ந்து அறிவதுமே இவ் ஆய்வின் முக்கியத்துவமாகும்.

இவ் ஆய்வானது அளவுசார், பண்புசார் ஆய்வு என்பதனால் முதலாம், இரண்டாம் நிலைத் தரவு முறைகளைக் கொண்டே தகவல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நேர்காணல், கலந்துரையாடல், வினாக் கொத்து, அவதானம் ஆகிய வழிகளில் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. கோட்பாட்டு விடயங்களை முன்வைப்பதற்கும் ஏற்கனவே செய்த ஆய்வுகள் மற்றும் முன்பு எழுதப்பட்ட நூல்கள் என இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இஸ்லாமிய வங்கியாக, அமானா வங்கியானது எவ்வாறு தன்னை அடையாளப்படுத்த வேண்டும் என்பதனையும் மேலும், இவ் ஆய்வின் மூலம் அமானா வங்கியினது அனைத்து செயற்பாடுகளும் முழுமையான ஷரீஆ வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. அமானா வங்கியினது ஒவ்வொறு நிதியியல் நடவடிக்கையும் பூரணமான ஷரீஆ சபையின் சிறந்த இஸ்லாமிய அறிஞர்களின் ஆலோசனையுடன்

செயற்படுத்தப்படுகின்றமையை அறிய முடிகிறது. எனினும் இந்நிதியியல் நடவடிக்கையினை ஷரீஆ முறையோடு மக்களிடத்தில் எடுத்துக் செல்வதில் இன்னும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. இவற்றினை சிறந்த முறையில் நீக்கி மக்களது நிதியியல் தேவையை ஷரீஆ வழிநின்று நிறைவேற்றல் வேண்டும். மேலும் எதிர்காலத்தில் இவ்வாய்வு சம்மந்தாமான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இது தொடர்பான ஆலோசனைகள் பெறவும் இவ்வாய்வு பயனுள்ளதாக அமையும்.

# "தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் மீதான கலாசார தாக்கம்- வவுனியா தெற்கு வலயத்தை மையப்படுத்திய ஆய்வு"

**Supervisor**
*Dr. MIM. Jazeel (Senior Lecturer) &*
*Mr. K. Muhammad Rifthy*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. A. Aseena,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது "தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் மீதான கலாசார தாக்கம்" என்ற தலைப்பில் ஒரு கள ஆய்வாக விளங்குகின்றது. வவுனியா மாவட்ட கல்வி வலயத்தில் அமையப் பெற்றுள்ள வவுனியா தெற்கு வலயமானது அதிகமாக தமிழ் முஸ்லிம் கலவன் பாடசாலைகளாக காணப்படுகின்றது.

இவ்வலயத்தில் மொத்தமாக 109 பாடசாலைகள் உள்ளன. இங்கு 25 சிங்களப்பாடசாலைகளும், 74 தமிழ் பாடசாலைகளும் 10 முஸ்லிம் பாடசாலைகளும் 6 தமிழ் முஸ்லிம் கலவன் பாடசாலைகளும் உள்ளடங்கியுள்ளது. இதில் கல்வி கற்கும் மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தி இங்கு கல்வி கற்பதால் ஏற்படுகின்ற கலாசாரத்தாக்கங்களை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டமானது தமிழர்களைப் பெரும்பான்மையாகவும் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் கொண்டமைந்துள்ளது. பெரும்பான்மை சமூகத்துக்கு மத்தியில் வாழும் போது பெரும்பான்மை சமூகத்தின் கலாசார நடவடிக்கைகள் சிறுபான்மையினரின் வாழ்கையில் செல்வாக்கு செலுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். கல்வி சமூகத்தைவழி நடாத்தும் சாதனமாகும். அது முறையாக இயங்குகின்ற போதே அது உயிரோட்டமுடையதாக மாறும். ஒரு சமூகம் எவ்வகையான கல்வியைப் பெறுகிறதோ அவ்வகைக் கல்வியின் பிரதிபலிப்பையே அச்சமூகம் வெளிப்படுத்தும்.

அந்த வகையில் தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் தனித்துவமான அடையாளச் சின்னமாக விளங்கும் கலாசாரப் பண்பாட்டு அம்சங்களில் அந்நிய கலாசாரமானது ஊடுருவிக் காணப்படுகின்றதா? என்பதை ஆய்வுப் பிரச்சனையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தில் காணப்படும் தமிழ் கலவன் பாடசாலைகளின் பூர்வீகத்தை அறிந்து கொள்வதோடு, இங்கு கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்கள் எவ்வாறான கலாசாரத் தாக்கங்களை எதிர்நோக்குகின்றனர்? தமிழ் கலாசாரமானது முஸ்லிம்கள் மத்தியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது? இது சமூகத்தில் எவ்வாறான விளைவை ஏற்படுத்துகின்றது? என்பதை இனங்கண்டு கொள்வதோடு இதிலிருந்து முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு விழிப்படையச் செய்வது என்பது பற்றிய ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாய்வானது அளவு மற்றும் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளாக: இப்பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் போன்றவர்களிடம் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக வலயக்கல்விப் பணிமனை அறிக்கைகள், பாடசாலைப் பதிவுத் திரட்டுப் புத்தகங்கள், இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள் ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் தமிழ் கலாசாரமானது தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

**Keywords**: தமிழ் கலாசாரம், முஸ்லிம் கலாசாரம், தமிழ் - முஸ்லிம் கலாசாரம், கலாசாரத் தாக்கங்கள், கல்வி, வவுனியா தெற்கு வலயம் என்பனவாகும்.

## "Challenges Faced By Islamic Windows of Conventional Banks in Srilanka."

**Supervisor**
*Mr. MSA. Riyad Rooly,*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. MI. Raihana Begum,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**ABSTRACT**

Islamic finance is the fastest growing segment of the global financial system. The Islamic financial sector is now facing great demand worldwide. The term Islamic banking became common in the 1960's, but the mechanisms and concepts of the system were implied and used since the birth of Islam. Islamic banking and finance practices are conceptually different from conventional practices.

